**மஹவ பிரதேச சபை - 2022**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து மஹவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குரகொட ரஜமஹா விகாரைக்குச் செலுத்த வேண்டிய 10 சதவீத நிறுத்தி வைத்தல் பெறுமதியான ரூபா 76,900 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(i) ஆம் பிரிவு | நிலுவையாகக் காணப்படும் மீதியினுள் 01 ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 4,550,898 நிலுவையான வீதவரி மீதியினையும் ரூபா 7,407 நிலுவையான ஏக்கர் வரியினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு சிகப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது . | உரிய பிரிவிலுள்ள அறிவுறுத்தலர்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) சட்ட விதி | | | |
| | (i) சட்டவிதி 218 | வருடாந்தம் காணி கட்டிடம் உள்ளடங்களாக நிலையான சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | மீளாய்வு முறைப்படியாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் . | உரிய சட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா 2,589,413 பெறுமதியான காலங்கடந்த 175 வைப்புக்கள் தீர்த்துவைக்கப்படவில்லை . | வைப்புக்களை விடுவிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 6,387,653 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 25,281,032 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 ஆம் ஆண்டு | | | | 2021 ஆம் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம்** | **பட்டியலிட ப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை (பட்டியலிட ப்பட்ட வருமானத் தில்)** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம்** | **பட்டியலிட ப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் உள்ளவாற ான நிலுவை (பட்டியலிட ப்பட்ட வருமானத் தில்)** |
| | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| வீத வரியும் | 5,432 | 5,520 | 4,138 | 1,382 | 5,432 | 5,062 | 3,500 | 1,562 |
| வரியும் வாடகை | 20,201 | 12,134 | 8,456 | 3,678 | 19,712 | 8,186 | 8,186 | - |
| அனுமதிப்ப த்திர கட்டணம் | 830 | 545 | 545 | - | 918 | 568 | 568 | - |
| ஏனைய வருமானம் | 8,370 | 15,565 | 724 | 14,841 | 16,011 | 9712 | 1483 | 8,229 |
| மொத்தம் | 34,833 | 33,764 | 13,863 | 19,901 | 42,073 | 23,528 | 13,737 | 9,791 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 106.8 மில்லியனாகவும் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 33.7 மில்லியனாகவும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 13.8 மில்லியனாகவும் இருந்ததுடன் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 19.9 மில்லியன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவீடு வேண்டிக் காணப்பட்டது. | நிலுவையான வரியை அறவீடு செய்வதற்கு தெரியப்படுத்துதல் ஒட்டுமொத்த சபைக்கும் சமர்ப்பித்தல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவையான வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வீதவரியும் வரியும்** | | |
| ஆண்டிற்கான மற்றும் வரி வருமானத்தில் ரூபா 1.4 மில்லியனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவையான வரி சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவையான வீதவரி மற்றும் வரியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) வாடகை** | | |
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையான குத்தகை வாடகை ரூபா 2,601,734 மற்றும் நிலுவையான கடை வாடகை ரூபா 1,925,840 மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | மீளாய்வாண்டில் காணப்பட்ட நிலுவையான குத்தகை வாடகையை நடைமுறை ஆண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சில நிலுவை வாடகைகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவையான வாடகையை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரை கட்டணமும்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 13,095,130 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 17,012,974 ஆகும். | பெறவேண்டிய தண்டப் பணம் மற்றும் குத்தகைக் கட்டணத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | நீதிமன்ற தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணத்தையும் துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்டுய்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுக்கள் சுகாதாரம் பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது விதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தலும் நிருவகித்தலும், பொதுமக்களின் நலவாழ்வு, வசதிகள், நலன்புரிகள் ஆகிய சபையினால் நிறைவேற்றப்படவிருந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதான 30 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபநியதிச்சட்டம் விதிக்க வேண்டியதாக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எந்த விடயம் சம்பந்தமாகவும் சபையினால் உபநியதிச்சட்டம் விதிக்கப்படவில்லை. | உப நியதிச்சட்டம் எதுவும் மீளாய்வாண்டில் விதிக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட உப நியதிச்சட்டத்தை கடைப்பிடித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சபைக்கு வருமானத்தை உழைக்ககூடிய வாய்ப்புக்களை இனங்கண்டு உப நியதிச்சட்டங்களை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை. | மீண்டும் ஆதனங்களை மதிப்பீடு செயற்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக வீதவரியினை மதிப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 13 கணக்கு விடயங்களின் ரூபா 64,325,638 தொகையான பெறவேண்டிய மீதி காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 844,521 தொகையானது 7 விடயங்களுக்குரிய 5 ஆண்டுகளை மிகைத்த மீதியாகும். | நிலுவையான மீதியை அறவீடு செய்யம் நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பெவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 விடயங்கள் தொடர்பாக ரூபா 27,820,588 தொகையான செலுத்த வேண்டிய மீதி காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 844,521 தொகை 7 விடயங்களுக்குரிய 5 ஆண்டுகளை மிகைத்த மீதியாகும். | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்துவைப்பதற்கு அடுத்துவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 04 மயானங்களின் பெறுமதியும் காணியின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதிய பொருள் மீளாய்வு அறிக்கைக்கு இணங்க பொருள் இருப்பு பதிவேட்டிற்கு கொண்டுவரப்படாத பொருட்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் கணக்குகளில் செம்மையாக்கப்படும். | -மேற்படி- |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 08 ஊழியர்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 222,644 தொகையான அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி காணப்பட்டது. | இந்த ஊழியர்களின் கடனை வதிவழிப்பது தொடர்பான ஆலோசனை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | கடன்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.4 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) ரூபா 186,277,627 பெறுமதியான 10 காணிகளை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை பொறுப்பேற்கான நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | உரிய காணிகளை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை சபையின் பொறுப்பேற்கப்படாததும் பெறுமதியை உறுதியாக இனங்காண முடியாததுமான காணிகளும் பொதுக் கிணறுகளும் 38 ஆகும். | இனங்காணும் நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபையின் ஆதனங்களை உறுதியாக இனங்காண்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) ரூபா 2,400,000 பெறுமதியான சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 02 வாகனங்களையும் 04 காணிகளையும் தெளிவாக இனங்கண்டு சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்டகை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இரண்டு வாகனங்களையும் காணியையும் தீர்த்துவைக்கும் நடவடிக்கையை அடுத்துவரும் காலங்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) தளபாடங்களும் பொருத்திகளும், இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் துணைக் கருவிகளுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணுதல் வேண்டும். |

3.5 **பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) சபையில் காணப்படுகின்ற ரூபா 525,000 பெறுமதியான 02 உழவு இயந்திரங்கள் பிலிசரு நிலைய வளவில் விளைவற்றுக் காணப்பட்டன. | வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை சிறப்பாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையிடம் 216 குழாய்க் கிணறுகள் காணப்பட்டதுடன் அவற்றில் 159 கிணறுகள் மாத்திரம் செயற்படும் மட்டத்தில் காணப்படுகின்றன. | பொதுமக்களிடமிருந்து கிடைத்த வேண்டுதல்களுக்கு இணங்க பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 03 வருமானத் தலைப்புக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 40 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன் 42 செலவுத் தலைப்புக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 40 சதவீத்திற்கு மேற்பட்ட முரண்கள் காணப்பட்டன. மேலும் 40 செலவு விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து எந்த செலவும் செய்யப்படாது நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினை வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |